செ.வெ.எண்: 674 2/10/09

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
குறளகம், சென்னை–108

## அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா
## குறளகம் காதிகிராப்டில் பட்டு கண்காட்சி திறப்பு விழா
## மற்றும் கதர் சிறப்பு விற்பனை துவக்க விழா

அண்ணல் காந்தியடிகள் 141–வது பிறந்த நாள் விழாவினை (02.10.2009) தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மிகவும் சிறப்பாக கொண்டாடி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வளர்ச்சிப் பணிகள் பன்மடங்கு அதிகரித்து வந்துள்ளன. உற்பத்தி, விற்பனை, வேலைவாய்ப்பு அளித்தல் ஆகிய திட்டங்களை திறம்பட செயல்படுத்துதல் ஆகியவற்றில் இவ்வாரியம் சிறப்பான முன்னேற்றத்தினை அடைந்துள்ளது. நிர்வாகக் கூட்டமைப்பிலும், திட்டங்களை திறமையாக செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவில் மற்ற வாரியங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ள நூற்போர் மற்றும் நெய்வோர் தொடர்ந்து வேலைவாய்ப்பினை பெறும் பொருட்டு கதர் இரகங்களை அனைத்து தரப்பு மக்களும் விரும்பி அணிந்திடும் வகையிலும், தமிழகமெங்கும் உள்ள காதி கிராப்ட்டுகளில் கதர் பருத்தி, பாலியஸ்டர், உல்லன் மற்றும் பட்டு உட்பட அனைத்து கதர் இரகங்களும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இத்தீபாவளி பண்டிகையை முன்னிட்டு புத்தம் புதிய வடிவமைப்பில் பல நவீனரக 100 சதவீதம் அசல் பட்டு சரிகை புடவைகளும், கதர் பருத்தி, பாலியஸ்டர் ரக வேஷ்டி, சட்டைகள் ஆயத்த ஆடைகள் மற்றும் பட்டு

சாம்பிராய்டரி புடவைகள், வெஜிடபிள் டை சர்ட்டிங் வகைகளும் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து காதி கிராப்டுகள் மூலம் விற்பனை செய்வதற்கு வைக்கப்பட்டுள்ளன. நடுத்தர மக்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் பயன்பெறும் வகையில் ரூ.2,000/- விலை மதிப்பிலான பட்டுப் புடவைகளும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப்பட்டுப் புடவைகள் அனைத்தும் தரமுள்ள பட்டினால் செய்யப்பட்டவை என்பதை நுகர்வோர் எளிதாக அடையாளம் கண்டிட உதவும் பொருட்டு மத்திய பட்டு வாரியம் வழங்கியுள்ள <u>**"சில்க் மார்க்"**</u> லேபிள்கள் ஒட்டப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தரமான பட்டுப் புடவைகளை உற்பத்தி செய்கிறது என்பதற்கு இதுவே சான்றாகும். இந்த காதி கிராப்டில் இவ்வாண்டு ரூ.251.00 இலட்சத்திற்கு கதர் இரகங்கள் விற்பனை செய்யவும் மற்றும் ரூ.354.00 இலட்சத்திற்கு கிராமப் பொருட்கள் விற்பனை செய்யவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காந்தியடிகளின் ஆசிபெற்ற கதர் துணியின் விற்பனையில் பெரும்பகுதி அதனை உற்பத்தி செய்யும் கிராமப்புற ஏழை மக்களுக்கு ஊதியமாகவே போய் சேருகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே பொது மக்கள் அனைவரும் இத்தீப திருநாளாம் தீபாவளி, பக்ரீத், கிருஸ்மஸ், பொங்கல் பண்டிகைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கியுள்ள 30 சதவீதம் வரையிலான சிறப்பு தள்ளுபடியை பயன்படுத்தி அதிக அளவில் கதர் இரகங்களை வாங்கி இத்தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வாழ்வு வளம் பெற உதவிடுமாறு இவ்வாரியம் கேட்டுக் கொள்கிறது.

அரசு பணியாளர்கள், ஆசிரியர்கள், அரசு நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் ஆகியோர்களுக்கு வழக்கம் போல் கதர் பருத்தி, பட்டு, பாலியெஸ்டர் உட்பட அனைத்து கதர் இரகங்களும் முறையாக கடன் முறையில் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்பு நிறுவனங்களிலும், வாரியங்களிலும் பணிபுரிவோர் குறைந்த பட்சம் ரூ.500/– மதிப்பிற்காவது கதர் இரகங்களை வாங்கி ஆதரிக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தீபாவளி சிறப்பு கதர் விற்பனை காலம் 02.10.09 முதல் 16.10.09 வரை நடைபெற உள்ளது.

**மாண்புமிகு கதர் துறை அமைச்சர்** அவர்களால் பட்டு கண்காட்சியினைத் திறந்து, விற்பனை துவக்கி வைத்து சிறந்த கைவினைஞர்களுக்கு பரிசு மற்றும் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விழாவிற்கு தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலர் கைத்தறி, கைவினை, துணிநூல் மற்றும் கதர் துறை அவர்கள் தலைமை வகித்தும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரிய கௌரவச் செயலர் அவர்கள் முன்னிலை வகித்தார்கள். மேலும் வாரிய அலுவலர்கள், பணியாளர்கள், கதரங்காடி அலுவலர்கள், பணியாளர்கள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
தலைமைச் செயலகம், சென்னை-9